உயர்நிலை 1

மரபுத்தொடர்கள் 1 – 15
இணைமொழிகள் 1 – 10
உவமைத்தொடர்கள் 1 – 9
பழமொழிகள் 1 - 12

மரபுத்தொடர்கள்

1. ஆசை வார்த்தை – ஏமாற்றுதல்
கள்வன் ஒருவன் ஆசைவார்த்தை கூறி சிறுமியிடமிருந்து நகையைப் பறிக்க முயன்றான்.

2. ஆறவமர - மெதுவாக
அவசரப்படாமல் ஆறவமரச் செய்யப்பட்டதால் அழகனுடைய ஒப்படைப்பு ஆசிரியரால் பாராட்டப்பட்டது.

3. ஏட்டிக்குப்போட்டி - எதிரிடையாகப்பேசுதல்
எதைச்சொன்னாலும் ஏட்டிக்குப்போட்டியாக எதிர்த்துப்பேசும் கலாவை அவளுடைய தாயார் கண்டித்தார்.

4. ஒரு கை பார்த்தல் - திறமையைக் காட்டுதல்
திருமண விருந்தில் பீமன் தனக்குப்பிடித்தமான மோர்க்குழம்பை ஒரு கை பார்த்தான்.

5. ஒளிவு மறைவு - பிறருக்குத் தெரியாமல் மறைத்து
நாம் ஒளிவு மறைவாகச் செய்யும் காரியங்கள் பிறருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

6. ஓட்டைக்கை - மிகுந்த செலவாளி
தன் தந்தை சேர்த்துவைத்த சொத்து முழுவதையும் விரைவில் செலவு செய்து ஏழையாகிவிட்ட குபேரனை ஓட்டைக் கையன் என்பர்.

7. ஓட்டை வாயன் - இரகசியத்தை எல்லோரிடமும் சொல்பவன்
ஓட்டைவாயனான சலீம் தன் நண்பன் தன்னிடம் சொன்ன இரகசியங்களை எல்லோரிடமும் சொல்லிவிட்டான்.

8. கட்டுக்கதை - பொய்க்கதை
வகுப்புக்குக் காலம் தாழ்த்தி வந்ததற்கு மாலா கூறிய கட்டுக்கதையை ஆசிரியர் நம்பவில்லை.

9. கம்பி நீட்டுதல் - யாருக்கும் தெரியாமல் நழுவுதல்
நகைக்கடையில் திருட முயற்சித்தத் திருடன் காவலரைக் கண்டதும் கம்பி நீட்டினான்.

10. கண்மூடித்தனம் – அறியாமை
பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்று கண்மூடித்தனமாக எண்ணிய காலம் மலையேறிவிட்டது.

11. கரைத்துக் குடித்தல் - மிகுதியான  புலமை பெறுதல்
குமரப்பாவின் பேச்சு அவர் திருக்குறளைக் கரைத்துக் குடித்தவர் என்பதை உணர்த்துகிறது.

12. காலில் விழுதல் - மன்னிப்புக் கேட்டல் / ஆசி பெறுதல்
* தன் தவறுகளை உணர்ந்து திருந்திவிட்ட செழியன் தன் தாயாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.
* திருமணமான தம்பதிகள் பெரியோர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றனர்.

13. குரங்குப்பிடி - பிடிவாதம்
முருகன் தனக்கு விலையுயர்ந்த பள்ளிப்பைதான் வேண்டும் என்று குரங்குப்பிடியாய் நின்று பெற்றோரிடம் வாங்கினான்.

14. கைகழுவுதல் - வெறுத்து ஒதுக்கிவிடுதல்
கொள்ளையில் ஈடுபட்ட சுதாகரனை அவனுடைய தாயார் கைகழுவினார்.

15. கையுங்களவுமாக - தவறு செய்யும் போதே பிடிபடுதல்
மூதாட்டியிடமிருந்து பணத்தைப் பறிக்க முயன்ற திருடன் கையுங்களவுமாய்ப் பிடிபட்டான்.

இணைமொழிகள் 1 - 10

1. அருமை பெருமை  - சிங்கப்பூரர்களாகிய நாம், நம் நாட்டின் அருமை பெருமைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

2. அக்கம் பக்கம்  - துரைசாமி தன் அக்கம் பக்க வீட்டினருடன் நட்பாகப் பழகினார்.

3. அல்லும் பகலும் - சேகர் அல்லும் பகலும் அயராது உழைத்ததால் மெலிந்து விட்டான்.

4. அன்றும் இன்றும் - சீனர்கள் அன்றும் இன்றும் சீனப்புத்தாண்டை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

5. ஆடல் பாடல் - பாரதியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இடம் பெற்ற ஆடல் பாடல் நிகழ்ச்சி வந்திருந்த அனைவரையும் கவர்ந்தது.

6. ஆடை அணிகள் - லலிதா தீமிதி விழாவைக் காண புதிய ஆடை அணிகளை அணிந்து சென்றாள்.

7. இன்ப துன்பம் - மிகுந்த வருத்தத்தில் இருந்த வளர்மதியை வாழ்க்கையில் இன்ப துன்பம் மாறி மாறி வரும் என்று கூறித் தேற்றினாள் அமுதா.

8. ஈவிரக்கம் - கோபக்காரரான முதலாளி, தன் தொழிலாளியை ஈவிரக்கம் இன்றி அடித்தார்.

9. உயர்வு தாழ்வு - நாம் பிறரிடம் பழகும்போது உயர்வு தாழ்வு பாராமல் பழக வேண்டும்.

10. ஓட்டமும் நடையும் - பள்ளியிலிருந்து வீடு திரும்பியபோது மழை பெய்யத் தொடங்கியதால் பாலு ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்தான்.

உவமைத்தொடர்கள் - 1 - 9

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல - தாயார் மரகதம், அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னைத் தூற்றும் பிள்ளைகளின் செயலையும் பொறுத்துக் கொண்டாள்.

2. அடியற்ற மரம் போல - தன் கணவன் இறந்த செய்தியை அறிந்த கண்ணகி அடியற்ற மரம்போல சாய்ந்தாள்.

3. அணை கடந்த வெள்ளம் போல - நீண்ட நேரம் தாயைக் காணாத குழந்தை அவரைக் கண்டதும் அணை கடந்த வெள்ளம்போல விரைந்து வந்து கட்டிக் கொண்டது.

4. அனலில் இட்ட மெழுகு போல - தனக்கு ஆதரவாக இருந்த தன் நண்பன் இறந்த பிறகு பாலன் அனலில் இட்ட மெழுகு போல உருகினான்.

5. இலை மறை காய் போல - திருக்குறளில் நீதிக் கருத்துகள் இலைமறை காய்போல ஆங்காங்கே மறைந்து காணப்படுகின்றன.

6. உயிரும் உடலும் போல - பாலுவும் கோபுவும் உயிரும் உடலும் போல பழகுவார்கள்.

7. ஊமை கண்ட கனவு போல - தன் நண்பன் வகுப்பில் தவறு செய்வதைப் பார்த்தும் அவனுடைய நண்பன் ஆசிரியரிடம் கூற முடியாமல் ஊமை கண்ட கனவுபோல் தவித்தான்.

8. எலியும் பூனையும் போல - மாலாவும் கலாவும் எலியும் பூனையும் போல எப்போதும் சண்டை போடுவார்கள்.

9. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல - சுரேஷும் ஜானும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல அன்புடன் பழகுவார்கள்.